இலங்கை அரசாங்கத்தால் ஒவ்வொரு ஆண்டும்
நடாத்தப்படும் புலமைப் பரிசில் பரீட்சை முன்னோடி வினாத்தாள்.

புவன் வெளியீடு - 2021

தரம் 5

2021 புலமைப் பரிசில் பரீட்சை எழுதும்
மாணவர்களுக்கானது

முன்னோடிப் பரீட்சை – 07

வினாத்தாள் ~ II

(ஆசிரியர் த. புவனேந்திரன், இந்துக்கல்லூரி, கொழும்பு) 05th January 2021

புள்ளி

பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அறிவுறுத்தல்கள்.

- **உமது சுட்டெண் மேற்குறித்த அடைப்பிலேயே இருக்கும் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.**
- **முன்றாம் பக்கத்தில் குறித்த இடத்திலும் உமது சுட்டெண்ணை எழுதுக.**
- **இவ்வினாத்தாளில் வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களுக்கும் விடைகளை இவ்வினாத்தாளிலேயே எழுதுக. செய்கை வேலைக்காக ஒரு தாள் வழங்கப்படும்.**

பகுதி II

விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

பக்க இலக்கம்	பெற்ற புள்ளிகள்
2	
3	
4	
5	
6	
7	
8	
மொத்தம்	
இறுதிப்புள்ளிகள்	
இலக்கத்தில்	
எழுத்தில்	

	முதலெழுத்தொப்பமும் குறியீட்டு எண்ணும்.
முதலாவது பரீட்சகர் புள்ளி வழங்கும் திட்டத்திற்கேற்ப விடைத்தாள் மதிப்பிடப்பட்டுள்ளது என உறுதிப்படுத்துகிறேன்.	
இரண்டாவது பரீட்சகர் முதலாவது பரீட்சகர் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்துகிறேன்.	
மதிப்பீட்டுப் புள்ளிகளை உறுதிப்படுத்தும் பரீட்சகர் மதிப்பிட்டு வழங்கிய புள்ளிகளும் இறுதிப் புள்ளிகளும் சரியென உறுதிப்படுத்துகிறேன்.	
பிரதான பரீட்சகர் மேற்பார்வை செய்தேன் இறுதிப்புள்ளிகள் சரியாகும்.	

ஆசிரியர் :- த. புவனேந்திரன்
0777 111 833

www.kedu.lk

LEARN EASY

- KNOWLEDGE IS POWER -

www.learneasy.lk

மகத்தான கல்விக்கு
உங்கள் ஆசான்

zoom

- ICT
- Maths
- English
- Commerce
- Tamil
- History
- Science
- Sinhala
- இன்னும் பல

தரம்
01-A/L

Medium

தமிழ்/ English

76667-4945

தனித்துவமான புலமைப்பரிசில் பரீட்சை வகுப்புக்கள்
தரம் 1 தொடக்கம் 5 வரை நடைபெறுகின்றன

www.learneasy.lk || www.lkedu.lk

01. பின்வரும் பந்தியை நன்கு வாசித்து கேட்கப்படும் வினாக்களுக்கான விடைகளைப் பந்தியில் இருந்து தெரிந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

சில மாதங்களாகப் புவியின் மேற்பரப்பில் ஒரு மழைத்துளியும் விழவில்லை. கடும் வெப்பத்தின் விளைவாக நிலத்தில் வெடிப்புக்கள், கோடுகளாகக் காணப்பட்டன. ஆறுகள், குளம், குட்டைகள், கிணறுகள், தடாகங்கள் ஆகியன வறண்டு போய் இருந்தன. கண்ணுக்குத் தெரியும் அளவிற்கு பச்சை நிறம் காணப்படவில்லை.

1. "பூமியின்" என்ற சொல்லின் ஒத்த கருத்தை புந்தியிலிருந்து தெரிந்தெடுத்து எழுதுக?

   .....

2. கடும் வெப்பத்தின் விளைவுகளில் ஒன்றை மாத்திரம் எழுதுக.

   .....

3. பந்தியில் உள்ள நீர் நிலை ஒன்றின் பெயரை எழுதுக.

   .....

4. பந்தியில் உள்ள அடைமொழி ஒன்றை எழுதுக.

   .....

5. "வறண்டு போய் இருந்தன" என்பதை ஒருமை வாக்கியமாக எழுதுக.

   .....

6. கண்ணுக்குத் தெரியும் அளவிற்கு பச்சை நிறம் காணப்படவில்லை என்பதன் கருத்தின் கீழ் கோடிடுக.

   1. பயிர்கள் செழித்து வளர்ந்திருந்தமை
   2. நிலத்தில் பச்சை வர்ணம் பூசப்படாமை
   3. தாவரங்கள் வெப்பத்தினால் அழிவடைந்திருந்தமை

02. பின்வரும் ஒத்த சொல்லிற்கு பொருத்மான ஒத்த சொல்லை அடைப்பில் இருந்து தெரிவு செய்து இடைவெளியில் எழுதுக.

1. காற்று - ..... (பவனம், புவனம், மிதப்பு)

2. அடி - ..... (நுணி, நுனி, ஆதி)

03. பின்வரும் வினாக்களின் வெற்றிடங்களுக்கு வரவேண்டிய சொல்லை அடைப்புக்குள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்கோடிடுக.

1. பன்றி தனது குட்டிகளுக்கு பால் ..... (ஊட்டியது, ஊட்டின)

2. காலையில் குருவிகள் பறந்து ..... (சென்றன, சென்றது)

3. மாணவன் பாடசாலையில் கல்வி ..... (கற்றனர், கற்றான்)

www.ikedu.lk

சுட்டெண் : | | | | | | | | வினாத்தாள் - II நேரம் : 1.15 மணித்தியாலம்

04. பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்து புள்ளிக் கோடிட்ட இடத்தில் எழுதுக.

1. ஒளியைப் பரப்புவது ..... (விளக்கு, விலக்கு)

2. நீடூழி காலம் ..... (வாள்க, வாழ்க)

3. ஆழம் ..... காலை விடாதே. (அரியாமல், அறியாமல்)

4. மக்களுக்குச் சேவை செய்வது மிகச் சிறந்த ..... ஆகும். (பனி, பணி)

5. ..... செய்ய விரும்பு. (அரம், அறம்)

05. சரியான எழுத்துக் கூட்டப்பட்ட சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

1. ஆராச்சி, ஆராய்ச்சி, ஆராட்சி, ஆராய்சி

2. நட்ச்சத்திரம், நட்சத்திறம், நச்சத்திரம், நட்சத்திரம்


06. பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான சொல்லை அடைப்புக்களில் இருந்து தெரிவு செய்து இடைவெளியில் எழுதுக.

1. யானை மிகுந்த ..... உடைய மிருகம். (பழம், பலம்)

2. அவ்விடத்தில் அள்ள அள்ளத் தண்ணீர் .....க் கொண்டேயிருந்தது. (ஊரி, ஊறி)

3. ..... முழுவதும் விளையாட்டு என மகாகவி பாரதியார் பாடினார். (மாளை, மாலை)

07. தரப்பட்டுள்ள குறுக்கெழுத்துக் கட்டங்களைப் பூரணப்படுத்துக.



இடமிருந்து வலம்
1. "துக்கம்" என்பதன் எதிர்ச் செல்
3. ஆறுவது இது என்பர்.

மேலிருந்து கீழ்
2. உண்ண உண்ணத் தித்திப்பது.

08. பினவரும் தமிழ்ச் சொற்களை சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழில் எழுதுக.

(1) வைத்தியசாலை - .....

(2) வாசியுங்கள் - .....

(3) குருவி - .....

09. பின்வரும் தமிழ்ச் சொற்களை ஆங்கிலச் சொற்களாக ஆங்கில எழுத்துக்களால் எழுதுக.

(1) நூலகம் - .....

(2) அலுவலகம் - .....

(3) நாட்காட்டி - .....

www.lkedu.lk

10. பின்வரும் வாக்கியத்தை சிங்களத்தில் கூறப்படும் விதத்தை தமிழில் எழுதுக.

வாருங்கள் அமருங்கள் - .....

11. பின்வரும் வாக்கியத்தை ஆங்கிலத்தில் சொல்லப்படும் விதத்தில் ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

தயவு செய்து அமைதியா இருங்கள். - .....

விடைகளைப் புள்ளிக்கோட்டில் எழுதுக.

12. குவியலொன்றில் 5 தேங்காய்கள் வீதம் 125 தேங்காய்கள் வைப்பதற்கு எத்தனை குவியல்கள் வைக்க வேண்டும்?

.....

13. ஹரினியின் வீட்டிலிருந்து பாடசாலைக்குள்ள தூரம் 3km 700m ஆகும். அவள் 800m தூரத்தை நடந்தும் மீதித் தூரத்தை பேருந்து வண்டியிலும் சென்றாள். அவள் பேருந்து வண்டியில் சென்ற தூரம் யாது?

.....

14. மூடை ஒன்றில் 50kg மா இருந்தது. அதிலிருந்து 18kg 750g மா வெளியே எடுக்கப்பட்டது. மீதியாக உள்ள மாவின் நிறை யாது?

.....


15. ஒரு பாத்திரத்திலுள்ள மண்ணெண்ணெயிலிருந்து 6 லீற்றர் 250 மில்லிலீற்றர் அகற்றிய பின்னர் எஞ்சியிருக்கும் கனவளவு 12 லீற்றர் 475 மில்லிலீற்றர் ஆகும். பாத்திரத்திலே முதலில் இருந்த மண்ணெண்ணெயின் கனவளவு யாது?

.....

16. விடுபட்ட எண்ணைக் காண்க. (27) + (30) + (.....) = (80)

.....

17. படத்தில் காட்டியவாறு சதுரம் ஒன்று சிறிய சதுரங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. நிழற்றப்பட்ட பகுதி, முழவதின் என்ன பின்னமாகும்?



.....

18. கீழேயுள்ள எண் தொடரியில் அடுத்துவரும் இரண்டு எண்களும் எவை?
120, 60, 30, ..., ...

.....

www.ikedu.lk


19. சாந்தன் கீழேயுள்ள எண்களை சோடிகளாகத் தெரிவு செய்தான்.

4 23 45 57 120

அவன் அவ்விரு எண்களையும் பெருக்கினால். 200 இதற்கும் 300 இதற்கும் இடையில் விடை கிடைக்கக்கூடிய அந்த இரண்டு எண்களும் எவை?

.....

20. கீழே காட்டப்பட்டுள்ள ஒழுங்கான அறுகோணியின் சுற்றளவு யாது?



.....

21. தென்னந்தோப்பொன்றில் ஒரு நிரையில் 325 தென்னை மரங்களும் மற்றைய நிரலில் 345ம் இன்னொரு நிரலில் 300ம் நடப்பட்டது, எனின் அத்தென்னந்தோப்பில் உள்ள தென்னை மரங்களின் எண்ணிக்கை யாது?

.....

22. 

கடிகார முகம் காட்டும் நேரம் முற்பகல் நேரமாகும். இதனை நியம நேரத்தல் எழுதுக.

.....

23. சாதாரண வருடத்தில் 28 நாட்களைக் கடக்கும் மாதங்கள் எத்தனை?

.....

24. 500g பருப்பின் விலை ரூபாய் 36.00 எனின் 750g பருப்பின் விலை யாது?

.....ரூபா.....சதம்

25. வடக்கிற்கும் கிழக்கிற்கும் இடைப்பட்ட திசையின் எதிர்த்திசை யாது?

.....

26. 8m நீளமான கயிற்றில் 35cm நீளமான 8 துண்டுகள் வெட்டப்பட்டால் எஞ்சிய துண்டின் நீளம் யாது?

.....

27. 18 என்ற இந்து அராபிய எண்ணை உரோம இலக்கத்தில் அமைக்க எத்தனை தீக்குச்சிகள் தேவை?

.....

www.lkedu.lk

28. பற்சில்லுகளைக் கொண்ட ஓர் உபகரணம்

(1) துவிச்சக்கரவண்டி (2) ஒற்றைச் சில்லு வண்டி (3) தேங்காய் துருவி

29. பின்வரும் எந்த விளையாட்டில் கைக்கவசம், காற்கவசம் என்பன அணியப்படுகின்றன?

(1) எல்லே (2) கரப்பந்து (3) கிரிக்கெற்

30. இலங்கையில் பரவும் பெரும் எண்ணிக்கையான கொள்ளை நோய்களுக்கு காரணமாக அமையும் பிராணி வகை எது?

(1) எலி (2) நாய் (3) நுளம்பு

31. இலங்கைக்கு முதன்முறையாக ஒலிம்பிக் பதக்கம் ஒன்றைப் பெற்றுக்கொடுத்தவர் யார்?

(1) சுசந்திகா ஜயசிங்க (2) டங்கன் வைட் (3) ஜூலியன் போலிங்

32. மகாவலி ஆறு கடலுடன் சேரும் இடத்தை அண்டிய நகரம் எது?

(1) திருகோணமலை (2) மட்டக்களப்பு (3) முல்லைத்தீவு

33. மரவேலைப்பாடுகளுக்குப் பிரசித்திபெற்ற இடம்

(1) யாப்பகூவ காவலரன் (2) லோவாமஹாபாய (3) அம்பக்க தேவாலயம்

34. எல்லாச் சமயத்தினரும் வணங்கித் துதிக்கும் சிவனொளிபாதமலை அமைந்துள்ள மாகாணம் எது?

(1) ஊவா (2) மத்திய (3) கிழக்கு

35. கொடிகளில் காய்க்கும் பழம்

(1) நெல்லி (2) திராட்சை (3) மாதுளை

36. கிளைகளிலும் தண்டுகளிலும் காய்கள் உண்டாகும் தாவரம்

(1) பலா (2) வெரலு (3) மங்குஸ்தான்

37. சக்தியைத் தரும் உணவு

(1) பசளி (2) ஈரப்பலா (3) வெண்டி

38. ஆழமான கிணற்றிலிருந்து நீரை மேலே எடுப்பதற்கு பயன்படுத்தப்படுகின்ற வேலையை இலகுவாக்கும் பொறி எது?

(1) நீர்ச்சில்லு (2) பற்சில்லு (3) கப்பி

39. ஒரு நாட்டுக்கே உரித்தான முலையூட்டி விலங்கு

(1) ஆந்தை (2) சுண்டெலி (3) மரத்தவளை

40. கொழுப்பு அதிகம் அடங்கியுள்ள ஓர் உணவுக்கான உதாரணம்

(1) கடலை (2) சோயா அவரை (3) நிலக்கடலை

41. ஒருவர் மயக்கமடைந்ததும் உடனடியாகச் செய்ய வேண்டியது

(1) உடலை நன்கு போர்த்துதல் (2) நன்கு காற்றோட்டம் கிடைக்கச் செய்தல்

(3) குளிர் நீர் பருகக் கொடுத்தல்

42. நிலத்தில் வளரும் தாவரமொன்று நீரையையும் பசளையையும் பெறுவது

(1) வேர்களினால் (2) இலைகளினால் (3) பூக்களினால்

43. செக்குப் பயன்படுத்தப்படுவது

(1) ஆணி அறைவதற்கு (2) எண்ணெய் பிளிவதற்கு (3) பாரம் இழுப்பதற்கு

44. நுளம்புகளை அழிப்பதற்கு பொருத்தமான முறை அல்லாதது

(1) துளசி இலைகளை எரித்துப் புகையூட்டுதல்

(2) நீர் தேங்கி நிற்கும் இடங்களை அழித்தல்

(3) நீர் நிரப்பிய பாத்திரத்தில் மலர்களை இட்டு வைத்தல்

45. நிலத்தில் ஒன்றுசேரும் பல்வேறு கழிவுப் பொருட்களைச் சிறு துண்டுகளாக்கி, அவை உக்குவதற்கு உதவி புரியும் பிராணி

(1) நத்தை (2) செவ்வெறும்பு (3) கறையான்

46. தண்டுத் துண்டுகளை நாட்டுவதன் மூலம் புதிய தாவரங்களைப் பெறக்கூடிய இரண்டு பயிர்கள்

(1) மரவள்ளி, பசளை (2) சோளம், மரவள்ளி (3) கறிமிளகாய், கங்குன்

47. 'நீர்ப்பிசாசு' என்பது

(1) நீர் நிலைகளுக்கு அருகே வாழும் ஒரு பிராணி

(2) பிராணிகளிடமிருந்து பயிர்களைப் பாதுகாப்பதற்காகப் பயன்படும் ஓர் அமைப்பு

(3) பண்டைய கதையொன்றில் இடம்பெற்றுள்ள மாயக் கதாபாத்திரம்

48. மகாவலி, வளவை ஆகிய நதிகள் கடலிற் சேரும் இடங்கள் முறையே

(1) மட்டக்களப்பு, அம்பலாந்தோட்டை (2) மட்டக்களப்பு, அம்பாந்தோட்டை

(3) திருகோணமலை, அம்பலாந்தோட்டை

49. இளஞ்சிவப்பு நிறத்தளிர்களை உருவாக்கும் தாவரம்

(1) எலுமிச்சை (2) நாகமரம் (3) வெற்றிலை

50. ஒரு வித்தினை மாத்திரம் கொண்ட பழம்

(1) நெல்லி (2) விளாம்பழம் (3) மங்குஸ்தான்

51. பெரும்பாலும் ஆடைகளில் அல்லது விலங்குகளின் உடல்களில் ஒட்டிப் பரம்பலடையும் வித்து

(1) எண்ணை (2) துத்திரி (3) காசித்தும்பை

52. உலைத்துருத்தியைப் பயன்படுத்துபவர்

(1) தச்சர் (2) மீனவர் (3) கொல்லர்

53. காற்றின் மூலம் தொழிற்படும் சங்கீத உபகரணம்

(1) கொம்பு வாத்தியம் (2) தவில் (3) உடுக்கு

STUDY ONLINE

இணையத்தில் ஒரு கல்வி புரட்சி

தரம் 1 தொடக்கம்
A/L வரையான
எல்லா
தரத்தினருக்கும்
அனைத்துப்
பாடங்களையும்



இணையத்தில் கற்றுக்கொள்ளலாம்

WWW.LKEDU.LK

facebook.com/lkedulk facebook.com/groups/lkedu

ஒவ்வொரு நாளும் புதிது புதிதாக, பார்க்க மறவாதீர்கள்...

54. கிறுக்கல் கவிதைகள், சுவரோவியங்கள் ஆகியன காணப்படும் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற இடம்

(1) சீகிரியா (2) யாப்பகூவ (3) இசுறுமுனி

55. பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் விலங்குகள் மாத்திரம் அடங்கும் விடையைத் தெரிவு செய்க.

(1) கரப்பான், வீட்டு ஈ, மூட்டைப்பூச்சி (2) தண்டுகோதி, ஏபிட்டு, வெண்மூட்டைப்பூச்சி

(3) மூட்டைப்பூச்சி, பேன், உண்ணி

56. பின்வரும் உணவுப் பொருள்களுள் உற்பத்தித் திகதிக்கும் காலாவதியாகும் திகதிக்குமிடையே குறைந்த காலத்தைக் கொண்டது எது?

(1) ரின்மீன் (2) யோகட் (3) பாற்கட்டி

57. வெளிநாட்டில் வசிக்கும் உமது பேனா நண்பன் தலதா பெரஹரா படமொன்றை இயன்றவரை துரிதமாக அனுப்புமாறு உங்களிடம் கேட்டுக் கொண்டுள்ளான். இதற்காக நீங்கள் பயன்படுத்தக்கூடிய மிகவும் பொருத்தமான முறை பின்வருவனவற்றுள் எது?

(1) விமானத் தபால் (2) கடுகதித் தபால் (3) மின்னஞ்சல்

"நான் சென்ற சுற்றுலாப் பயணம் மகிழ்ச்சியானது" என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக. ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு மேல் அமைந்திருக்க வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் சரியாக அமைந்திருக்க வேண்டும்.

58. .....

.....

59. .....

.....

60 . .....

.....

www.lkedu.lk